DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.43/2022**

**அ.சா.–9**

| | |
|---|---|
| பெயர் : திரு. டாக்டர் அருண் | கிராமம்: சேலம் |
| த/பெ. : திரு. முனியன் | தாலூக்கா : சேலம் |
| வயது : 38 | தொழில்: அரசு மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 3rd day of February, 2026.

எதிரி ஆஜர். எதிரியின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் தற்போது சேலம் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் முதுநிலை உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.08.2021 அன்று பணியிலிருந்தபோது வாழப்பாடி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் குற்ற எண்.413/2021 வழக்கில் இறந்துபோன மணிகண்டன் வயது 36 என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக உடலை பெற்றுக்கொண்டு அன்றைய தினமே பிரேத பரிசோதனை செய்தேன். அந்த உடலை தலைமைக்காவலர் திரு.முருகன் அடையாளம் காட்டினார். உடலை பார்த்தபோது உடல்முழுவதும் பிணவிறைப்பு தன்மை காண்ப்பட்டது. இறந்த நபர் மிதமான உடல் போசாக்கு உடையவராக காணப்பட்டார்.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

பின்வருவன இறப்பிற்கு முன்னால் ஏற்பட்ட காயங்கள் –

1. **பின்வருவபவை கிழிந்தகாயங்கள்** – 1. நெற்றியின் நடுப்பகுதியில் 8 செ.,மீ X 1.5cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. b) வலது புருவத்தில் 5 செ.,மீ X 1.5 cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. c) இடது புற நெற்றியில் புருவத்திற்கு மேல் 4 செ.,மீ X 1 cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. d) மூக்கு பகுதியில் 5 செ.மீ X 0.5 cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. e) வலது கை முட்டியில் பின்பகுதியில் 2 செ.மீ X 0.5 cm X 0.5 cm அளவில் ஒரு காயம் காணப்பட்டது. f) வலது புற பின்தலையில் 8 செ.,மீ X 3 cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது. g) வலதுபுற பின்தலையில் மேற்கூறிய காயத்திற்கு கீழ் 2 செ.,மீ X 1 cm அளவில் ஒரு காயமும் எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது.

2. வலது புற தொடையின் மேல்பகுதியில் 5 செ.,மீ X 1 X 0.25 cm அளவில் ஒரு கன்றிய காயம் சிவப்பு நிறத்தில் காணப்பட்டது.

3. மேல்தாடையில் வீக்கம் காணப்பட்டது. அதை மேலும் குறுக்கு வெட்டுத்தோற்றத்தில் பார்த்தபோது அதனடியில் இருக்கும் மேல்தாடை எலும்பு உடைந்து காணப்பட்டது. அதைச்சுற்றி கன்றிய காயங்களும், மேல்தாடையில் உள்ள முன்பற்கள் தளர்வுடன் காணப்பட்டது.

உட்புறமான கூராய்வு செய்து பார்த்தபோது தலை தோலின் அடிப்பகுதியில் மேற்கூறிய வெளிப்புற காயங்களுடன் ஒன்றி கன்றிய காயங்கள் காணப்பட்டது. மண்டைஎலும்பு, மூளை உறை, மண்டை எலும்பின் அடிப்பகுதி இயல்பான நிலையில் இருந்தது. மூளை முழுவதுமாக ரத்தம் கசிந்து காணப்பட்டது. அதன் குறுக்கு வெட்டுத்தோற்றத்தில் ரத்தம் செறிந்த நிலையில் காணப்பட்டது. மற்ற

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

அனைத்து உடல் உள்ளுறுப்புகள் இயல்பான நிலையிலும் குறுக்கு வெட்டுத்தோற்றத்தில் ரத்தம் செறிந்த நிலையிலும் காணப்பட்டது. இரைப்பையில் 400 கிராம் பிரவுன் நிற பாதி செரித்த உணவு பொருட்கள் கடுமையான வாசனையுடன் காணப்பட்டது. மேற்கூறிய நபர் பிரேத பரிசோதனை செய்வதற்கு 12 முதல் 24 மணிநேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும்.

பிரேத பரிசோதனை முடிந்து உடல் உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டது. அந்தபகுப்பாய்வில் எத்தில் ஆல்கஹால் எனப்படும் மதுவகை உடல் உள்ளுறுப்புகளில் கண்டறிப்பட்டுள்ளது.

**இறுதியறிக்கை –**

மேற்கூறிய நபர் தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னால் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையாகும். அது **அ.த.சா.ஆ.10** ஆகும். என்னிடம்காட்டப்படும் ஆவணம் என்னால் வழங்கப்பட்ட இறுதிக ருத்துரு ஆகும். அது **அ.த.சா.ஆ.11** ஆகும். உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனை செய்து வழங்கிய ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ–12** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் மருத்துவமனையில் கடந்த 02.08.2021 அன்று காலை 03.25 மணிக்கு பணியிலிருந்த மருத்துவர் அருண்பிரபாகரன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு ஆகும். மேற்படி விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ–13** ஆகும். நான் மேலே சொன்ன காயங்கள் ஒரு நபரை கனமான உருட்டு கட்டையால் அடிக்கும்போது ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்படி காயங்கள்காரணமாக அந்த நபருக்கு மரணமும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

**குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)**:-

வெளிப்புற காயங்களில் நான் குறிப்பிட்டுள்ள மூன்றாவது காயத்தை தவிர இதர காயங்களில் எலும்பு முறிவுகள் இல்லை என்றால் சரிதான். உட்புற காயங்களில் குறிப்பிட்டுள்ள ரத்தக்கசிவு என்பது அதிகமான மதுபோதையினாலும், ரத்த அழுத்தத்தின் காரணமாகவும் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பில்லை. பொதுவாக எவ்வளவு அளவு ஆல்கஹால் ரத்ததில் கலந்தால் அது விஷமாக மாறும் என்றால் அது குறிப்பிட்டு சொல்ல இயலாது. ஒவ்வொரு நபரின் உடல் தன்மையை பொறுத்ததாகும். பொதுவாக ஒரு நபர் அதிகமாக ஆல்கஹால் எடுத்துக்கொண்டு சிகரெட் அல்லது வேறு போதை பொருளை எடுத்துக்கொண்டால் அவருக்கு இறப்பு ஏற்படுமா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்ல இயலாது. அது அந்தந்த நபரின் உடல் தகுதியை பொறுத்ததாகும். எனது ஆய்வறிக்கையில் இறந்துபோன நபர் ஆல்கஹால் காரணமாக இறக்கவில்லை என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரத்தக்கசிவு அதிகமான மதுபோதை மற்றும் ரத்த அழுத்தத்தினால் இறந்துபோன நபருக்கு ஏற்படவில்லை என்றும், ஆல்கஹால் காரணமாக அவர் இறக்கவில்லை என்றும், அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக தான் இறந்துபோய் விட்டார் என்றும், நான் சொல்லும் சங்கதிகள் மெடிக்கல் jurisprudance–க்கு எதிரானது என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் விசாரித்தபோது ஆயுதத்தை காட்டி விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்லும் நான் சொன்ன காரணத்தினால் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.